பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 19 வெள்ளிக்கிழமை (04-09-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 281

# ராணுவச் செலவால் நிதி நெருக்கடி; நிவாரணம் அரைவாசியாக வெட்டு!

## தமிழகத்திலிருந்து திரும்புவோருக்கும் எதுவுமே கிடைக்காமற் போகலாம்

கொழும்பு, செப்டெம்பர் 4

**அரசாங்கத்தின் இராணுவச் செலவு அதிகரித்து வருவதால் அது பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்குகிறது. அதனால் வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கும் நிவாரண உதவியைச் சரி அரைவாசியாகக் குறைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.**

இதே வேளை—

வடக்கு - கிழக்கு மாகாண அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கென இந்த வருடத்துக்கு 260 கோடி ரூபா தேவை எனக் கேட்கப்பட்டதாகவும் —

அரசாங்கம் நூறு கோடி ரூபாவை மட்டுமே ஒதுக்கியுள்ளதால், அகதிக் குடும்பங்களுக்கு வழங்கிவரும் நிவாரண உதவியை அரைவாசியாகக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் — புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் திரு. கிறிஸ்பி சில்வா நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

உடனடியாக, வடபகுதி அகதிகளுக்கான நிவாரணம் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

கொழும்பு அரசு பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதால் தமிழகத்தில் இருந்து திரும்பி வரும் அகதிகளுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிவாரண உதவிகள் கொடுக்கப்படுவதும் சந்தேகமே — என்று ஏஜன்சி செய்தி ஒன்று தெரிவித்தது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். செயலகத்துக்கு நேற்றுவரை தகவல் இல்லை

யாழ்ப்பாணம். செப் 4

இடம் பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் நிவாரணத்தைக் குறைப்பது சம்பந்தமாக எந்த வித அறிவித்தலும் கொழும்பில் இருந்து இதுவரை (நேற்று வரை) கிடைக்கவில்லை ஆகையால் இங்கு தொடர்ந்து வழமை போல் நிவாரணம் வழங்கப்படும்.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

செப்டம்பர் மாதத்துக்கு வழங்க வேண்டிய நிவாரணப் பொருள்களின் அளவுகள் ஏற்கனவே ப. நோ. கூ. சங்கங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டு விட்டதாகவும், அதற்கேற்ற விதத்தில் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [அ-3]

## ஈழ அகதிகளை அனுப்ப வேண்டாம் பண்ருட்டி கோருவாராம்

சென்னை, செப். 4

அகதிகளுக்கான நிவாரணத்தைச் சரிபாதியாகக் குறைப்பது என்ற ஸ்ரீலங்கா அரசின் முடிவு காரணமாக, தமிழகத்திலிருந்து மேலும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனத் தாம் வலியுறுத்தப்போவதாக பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த பண்ருட்டி இராமச்சந்திரன் கோரி உள்ளார்.

லண்டன் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார். [இ-10]

## வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளை பதிய பணிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

தமிழீழத்தின் வடபகுதியில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் தமது வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பதிவு செய்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி கோரி உள்ளார்.

பதிவுக் கட்டணமாக நூறு ரூபா செலுத்தி, யாழ். மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்—

பதிவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் பதிவு செய்யத் தவறுபவர்களின் எந்த ஒரு வாணிபமும், தொழில் முயற்சியும் தொடர்ந்து இயங்க இசைவளிக்கப்படமாட்டாது என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது.

வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்யும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 'குமண' தாமதமாகும்

யாழ்ப்பாணம். செப். 4

உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் இவ்வார இறுதியில் வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்ட 'குமண' கப்பல் காலதாமதமாகவே இங்கு வரும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். அலுவலக அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்று வரும் வேலை நிறுத்தம் காரணமாக 'குமண' கப்பலில் பொருள்கள் ஏற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## புறக்கோட்டையில் பிரசுரங்கள்

கொழும்பு, செப். 4

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனு மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியவையோடு, புறக்கோட்டை மற்றும் ஹல்ஸ்டோர்ப் பகுதிகளில் நீதித்துறையை பரிகசிக்கும் விதத்திலான துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. [ஒ-எ]

## ஸ்ரீலங்கா படையினர் நேற்று பரவலாகத் தாக்குதல்கள்

குடாநாட்டில் உள்ள ஸ்ரீலங்காப் படை முகாம்களில் இருந்து நேற்று பரவலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காரைநகர் கடற் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள கடற்படை படகுகளில் இருந்து நேற்று குடியிருப்புக்கள் மீது பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை, நேற்றுமுன்தினமும் இரவு 9மணி முதல் அதிகாலை வரையும் விட்டு விட்டு பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாதகல், தெல்லிப்பழை பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரும் நேற்றுப்பகல் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தினர். சில ஷெல்கள் சில்லாலைப் பகுதியில் விழுந்து வெடித்தன.

பூநகரி - கல்முனை மண்டைதீவு பகுதிகளில் இருந்தும் படையினர் நேற்று கலிபர் வேட்டுக்களைத் தீர்த்தனர். [ஒ-111-28-99-15-3]

## ஏறாவூர் பற்றுப் பகுதியில் அதிரடிப் படை குவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

மட்டக்களப்பு — ஏறாவூர் பற்றுப்பகுதியில் உள்ள முகாம்களில் பெரும் எண்ணிக்கையான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் தமிழ் மக்களிடையே பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

## மட்டு. தமிழ் கிராமங்களில் இராணுவ நெருக்கடிகள்

### மக்கள் வெளியே செல்லவும் தடை

யாழ்ப்பாணம், செப். 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் குருமண்வெளி, போரதீவு, மண்டூர், மகிளூர் போன்ற தமிழ்க்கிராமங்களில் இராணுவ நெருக்கடி அதிகரித்துள்ளதாக அறியவருகிறது.

தமிழ் மக்களின் வீடுகளில் தேடுதல் மேற்கொள்ளப்படுவதாகவும் — பொது இடங்களில் கூடுமாறு மக்களை அழைத்து அவர்களைத் துன்புறுத்துவதாகவும் தெரியவருகிறது.

தமிழ் மக்கள் வெளியே செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் — மேற்படி பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்தது. (ஒ-3)

## கடற்படையின் படகு கைபபற்றப்பட்டதை அரசு ஒப்புக் கொள்கிறது

கொழும்பு, செப் 4

மண்டைதீவில் இருந்த கடற்படையினரின் நவீனரக விசைப்படகு ஒன்று விடுதலைப் புலிகளால் கடந்த சனிக்கிழமை கைப்பற்றப்பட்டதை அரசு தற்போது ஒப்புக் கொண்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க இதை ஒப்புக்கொண்டார். [இ-10]

# இனப் பிரச்சினையை ஐ. நாவுக்கு எடுத்துச்செல்ல முன் முயற்சி

யாழ்ப்பாணம், செப். 4

இலங்கை இனப்பிரச்சினையை ஐ. நாவுக்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விவகாரத்தில் ஹோலந்து அரசாங்கம் முன் நிற்பதாக சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய சுவீடிஷ் உப்சால் பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷோக் இங்கு அறிவித்துள்ளார்:

இலங்கை இனப் பிரச்சினையில் ஐ நா. சபையை தலையிட வைக்க ஒரு நாடு குரல் எழுப்ப வேண்டியுள்ளதால் ஐரோப்பிய சமூக நாடுகளில் ஒன்றான ஹோலந்து முதலில் குரல் எழுப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 18ஆம் திகதி ஐரோப்பிய சமூக நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் பீற்றர் ஷோக் எதிர்வரும் நவம்பரில் மீண்டும் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். [இ-8]

**நீரைத் தேக்கி நில வளம் காப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.
**(Becon Study Centre)**

**A/L 93**
மீட்டல் வினா-விடை வகுப்பு

பொருளியல்
**வரதராஜன்** B. A. (Hons)

ஆரம்பம்:
**05 — 09 — 1992**
சனி 1-00 p.m.

★ எமது நிறுவன மாணவர்களுக்கு இவ் வகுப்பு இலவசமானது.
★ ஏனைய மாணவர்களில் ஒரு குறிப்பிட்டளவினரே அனுமதிக்கப்படுவர்:

[சி-3210]

---

## A/L PHYSICS
**திரு. விமல்ராஜ்**
சனி — ஞாயிறு
12.00 — BASIC + MECHANICS
1-00 — LIGHT
2-00 — HEAT

ஆரம்பம்:
**05-09-1992**

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
[சி-3316]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
### கூறுவிலை

இப் பல்கலைக்கழகத்திற்கு வேப்பம் விதைகள் தேவைப்படுகின்றன. வேப்பம் விதைகளை வழங்க விரும்புவோரிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. ஒரு கிலோவின் விலையைக் குறிப்பிடுவதுடன் எத்தனை கிலோ விதைகள் வழங்கலாம் என்பதும் குறிப்பிடப்படல் வேண்டும். கடித உறையில் "வேப்பம் விதைகள் வழங்குவதற்கான கூறுவிலைகள்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கூறுவிலைகள் இப்பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறைத் தலைவருக்கு 18 – 09 – 1992 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். கூறுவிலைகள் அதே நாளில் பிற்பகல் 2-00 மணிக்குத் திறக்கப்படும்.

– பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[சி 3229]

---

## பாராட்டுகிறோம்



க. பொ. த. (உ. த) பரீட்சையில்
4 ஏ பெற்ற செல்வன்
**பா. பகீரதன்**

பா. அ. சபை
ப. மா. சங்கம்,
வர்த்தக மாணவ மன்றம்,
அதிபர், ஆசிரியர், மாணவர்.

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
(22413)

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

★ கணிதம் ★ தமிழ் ★ சமூகக்கல்வி
ஆகிய பாடங்களுக்கு ஆண்டு 6 — 11 வகுப்புகளில் கற்பிப்பதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கணக்கு எழுதுவினைஞர்
பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

● விண்ணப்பங்கள் அனைத்தும் அதிபருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
03 - 09 - 1992 செயலர்.
[சி-3232]

---

## BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.

**92** டிசம்பர் **O/L**

### வினா - விடை

வகுப்புக்கள்

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — J R சூரி, விக்கி |
| கணிதம் | — இரா. அருட்செல்வம் |
| தமிழ் | — பாலா |
| ஆங்கிலம் | — தெய்வதவபாலன், M A ஹரி |
| சமூகக்கல்வி, வார்த்தகம் | — ராஜன் |
| சமயம் | — கணேஸ் |

**ஆரம்பம் - 05-09-1992** சனி 8-00 காலை

★ விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.
[சி-3304]

---

## NEW SCIENCE ACADEMY
JAFFNA.

**93 A/L**
**PAPER CLASS**
Pure / Applied Maths
By
**குணசிங்கம்** B Sc. (Hons)
Pure: அலகுற்று கேத்திர கணிதம்
Applied: காவிகள்

ஆரம்பம்: 05-09-1992
[சி-3333] 4-00 p.m.

---

## நீலகண்டன் காலமானார்

சென்னை, செ. 4

தமிழகத்தின் பிரபல திரைப்பட இயக்குனரும் தயாரிப்பாளரும் நாடக ஆசிரியருமான திரு. ப. நீலகண்டன் நேற்று சென்னையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 75

முதல் திகதி, கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி, காவல்காரன் போன்ற பிரபல்யமான படங்களை அவர் இயக்கி இருந்தார்.

(ஒ-எ-10)

---

## C. C. A.
யாழ்ப்பாணம்.

**Spoken English**
With
**Grammar**
By
**Jeyaganth**
ஆரம்பம்:
**10 — 09 — 1992**
4.30 p m
[சி-3328]

---

## தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

தகைமைகள் :- 8 ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த (உயர்தரம்) வரை.
உயரம் :- 5' 6''
வயது :- 18 — 30 வரை.

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 10 - 09 - 92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேராக சமூகந்தரவும், தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்.
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.
[சி- 8234]

---

## தவறிவிட்டது

லான்மாஸ்டர் இயக்கும் கைப்பிடி [ஆண்டில்] யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் வைத்து தவறிவிட்டது. இதை கண்டெடுப்பவர்கள் பாலா, இரட்னா கபே, K. K. S. றோட், மதவடி விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

[22418]

---

## ஆன்ம சாந்திக்கான திருப்பலி
### B. M. அந்தோனிப்பிள்ளை

B. M. அந்தோனிப்பிள்ளை [இளைப்பாறிய பொறியியலாளர்] பிரான்சில் காலமாகிவிட்டார். அன்னார் அமரர் B. மரியாம்பிள்ளை, றோசம்மா மரியாம்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், வேஜினி நீற்றா அவர்களின் அன்புக் கணவனும் ஆவார். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 05-09 92 சனிக்கிழமை காலை 7-15க்கு மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தாய், மைத்துனர்கள், மைத்துனிகள்.
332, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
[22417]

---

## றோயல் கல்வி நிலையம்
(மகளிர் கல்லூரி முன்பாக)
மானிப்பாய்

**SPOKEN ENGLISH**
By
**Mr. BRITTO**

ஆரம்பம்: 05- 09- 92 மாலை 5மணி
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)
[22420]

---

## Dr. அல்போன்சஸ் அத்தனாசியார்
பண்டத்தரிப்பு.

எனது சிகிச்சை நிலையம் தற்பொழுது இல. 3, கண்டி வீதி, வஸ்தியன் சந்தி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது. குழந்தைகள், முதியோர், மனநோயுற்றோர், மகளிர் சம்பந்தமான வியாதிகளுள்ளோர், கெற்ப காலப் பரிசோதனை வேண்டியோர் மேலும் பல வியாதிகளால் துன்புறுவோர் இங்கு சிகிச்சை பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்துடன் பல பல வியாதிகளுக்கான மருந்தெண்ணெய் வகைகளையும் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அன்புடன்;
வைத்திய கலாநிதி.
அல்போன்சஸ் அத்தனாசியார்.
[5296]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

# முழுமையான அதிகாரங்களுடன் 5 பிரதேச செயலகங்கள் இயங்கும்

யாழ்ப்பாணம், செப். 4
யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 5 பிரதேச செயலகங்கள் முழு அதிகாரங்களுடன் இயங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்கள் தற்சமயம் செயல்பட்டு வருகின்ற போதிலும், முழு வேலைகளும் பன்முகப்படுத்தப்படவில்லை. கணக்கு, சம்பள வேலைகள் மட்டுமே தற்சமயம் இச்செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நல்லூர், யாழ்ப்பாணம், கரவெட்டி, பருத்தித்துறை, உடுவில் ஆகிய பிரதேச செயலகங்களே ஜனவரி முதல் முழு அதிகாரங்களுடன் செயற்பட உள்ளன.

இதற்கு முன்னோடியாக இந்த அலுவலகங்களுக்கு ஐந்து கணக்காளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பதிவாளர் வேலைகள், ஓய்வூதிய வேலைகள், திட்டமிடல் வேலைகள், அடையாள அட்டை விநியோகம் யாவும் ஜனவரி முதல் இந்த ஐந்து செயலகங்களிலும் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படுவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-3-100)

## உலர் உணவு நிவாரணம் 50 வீதத்தினால் குறைப்பு!

கொழும்பு, செப். 4
வடக்கு — கிழக்கு மாகாணத்தில் தங்களது இருப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு இதுவரை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தின் பெறுமதி 50 சத வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இம் மாதம் முதலாம் திகதியில் இக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூகநலத் துறை அமைச்சு உத்தரவிட்டிருப்பதாக வவுனியா செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (த-எ)

## பகுப்பாய்வு அதிகாரிகள் அராலித்துறைக்கு விஜயம்

கொழும்பு, செப். 4
அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று பத்துப் படை அதிகாரிகள் உயிரிழந்த அராலித் துறைப் பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்தது.

படை அதிகாரிகள் பயணம் செய்த வாகனம் கண்ணி வெடியில் சிக்கிய இடத்தை அக்குழு பார்வையிட்டது.

குண்டு எவ்வாறு வைக்கப்பட்டது என்பதைக் கண்டறிவதே குழுவின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-எ)


'கருத்தரங்கு
ஆங்கிலம் கற்பித்தல்

பகுதி நேர ஆங்கில ஆசிரியர் எழுத்துப்பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்காக கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்களும் பங்கு பற்றும் கருத்தரங்கு:

நல்லூர் சாதனா பாடசாலையில் 05-09-1992 காலை 09 — 12வரை ஓய்வூதியர்களுக்கு முன்னுரிமை. பதிவு காலை 8மணி. அன்பளிப்பு ரூபா 25/-.

நல்லூர் ஓய்வூதியர் சங்கம்.
Pensioners Promote Perfect English.
(22409)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனேநம
MATHAN GOLD WORK SHOP

புதிய டிசைன்களில்
சங்கீதா வளையல்கள்
செய்யவும் உடனுக்குடன் அடித்துப்
பெற்றுக்கொள்ளவும்
★ மதன் தங்கத் தொழிற்சாலை ★

301, கஸ்தூரியார் வீதி,
மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
K. ஞானசேகர்
(22368)



SPECIAL ENGLISH

உயர்கல்வியைத் தொடரவும், ஆங்கில மொழியில் பூரண அறிவைப் பெறவும், ஒருங்கிணைந்த கற்கை நெறி

ஆரம்பம்: 06 - 09 - 1992
Sun. 10-00 a. m.

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விபரங்களுக்கு:
நிர்வாகி:
NEW SCIENCE ACADEMY
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
(சி-3301)


## வள்ளுவர் விழாவில் இன்று

யாழ்ப்பாணம், செப். 4
உரும்பராய் திருவள்ளுவர் மன்றத்தின் ஏற்பாட்டில் உரும்பராய் இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறும் வள்ளுவர் விழாவில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும்.

இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்விகள் ஜெயா, ஆர்த்தி, மாலினி ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர். திருமதி மீரா அருள்நேசன், திருமதி கிருஷ்ணவேணி நொபேட், திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் பங்குபற்றும் கருத்தரங்கு இடம்பெறும். திருமதி மனோன்மணி சண்முகதாஸ் திருக்குறள் ஆய்வுரை நிகழ்த்துவார்.

இறுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவு அளிக்கும் 'சீதன அம்புகள்'' நாட்டிய நாடகமும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (த)

## இறந்தோர் தொகை 26ஆக அதிகரிப்பு

கொழும்பு, செப். 4
சாய்ந்தமருது சந்தையில் கடந்த செவ்வாய் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 26 என்று தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## மாதாந்த உதவிப் பணம்

நவாலி, செப். 4
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்றுவருபவர்களுக்கான மே, ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய பணம் தற்போது வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (த-100)

## புனரமைக்கப்படுமாம்

கொழும்பு, செப். 4
வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது இயங்காமல் இருக்கும் கைத்தறி நெசவாலைகள் புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் விரைவில் புனரமைக்கப்படும்.

நெசவுக் கைத்தொழில் அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜீத் தமது அமைச்சு அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத் தகவலை வெளியிட்டார். (த-எ)

## முதல்முறையாக வெளிவாரி பட்டப்படிப்புநெறி பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 4
யாழ் பல்கலைக்கழகத்தில் முதல் தடவையாக வெளிவாரிப் பட்டப்படிப்பு நெறிப் பரீட்சைகள் எதிர்வரும் 14 ஆம் திகதியில் இருந்து நடைபெற உள்ளன.

முதல்கலைத் தேர்வு, முதல் வர்த்தகத் தேர்வு ஆகிய பட்டப்படிப்பு நெறிகள் முதல் தடவையாக யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பரீட்சைகள் நடைபெற உள்ளன.

இந்தப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் — தற்போது இடம்பெயர்ந்தவர்களுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்காது விட்டால் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (த 3)

## பதில் பீடாதிபதி

யாழ்ப்பாணம், செப். 4
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பதில் பீடாதிபதியாக பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (த-3)

## டென்மார்க் அரசு திகதி நிர்ணயிக்கவில்லை

கொழும்பு, செப். 4
இலங்கை தமிழ் அகதிகளை அவர்களின் தாயகத்துக்கு திருப்பி அனுப்புவதற்கான திகதி எதனையும் டென்மார்க் அரசாங்கம் நிர்ணயிக்கவில்லை.

நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'சண்டே ஐலண்ட்' ஆங்கில வார இதழ் இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (த-எ)

## மட்டக்களப்பில் பொலீஸ் நிலையங்கள்

யாழ்ப்பாணம், செப். 4
மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் தங்கி உள்ள அகதிமுகாம்களுக்கு அருகில் பொலீஸ் நிலையங்கள் திறக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பொலீஸ் நிலையங்களில் சிங்களப் பொலீஸாரே கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (த-3)

## கூட்டுப்படை அனுமதித்தாலே ரயில் சேவை!

கொழும்பு, செப். 4
கூட்டுப்படைகள் தலைமையகத்தின் அனுமதி கிடைத்த பின்னரே மட்டக்களப்புக்கான பயணிகள் ரயில் சேவை நடத்தப்படும்.

இத்தகவலை ரயில்வே கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த-எ)


யாழ். பல்கலைக்கழக
பட்டமளிப்பு விழா - 1992

மேற்படி விழாவில் பங்கு பற்றும் அனைத்து பட்டதாரி மாணவ, மாணவிகளுக்கு எமது நல் வாழ்த்துக்களும் நல்லாசிகளும்

ஞானம்ஸ் ஸ்ரூடியோ
உங்களை வரவேற்கின்றது.

யாழ். வளாக, கொழும்பு / பேராதனை வளாக
பட்டதாரி மேல் அங்கிகள்
எம்மிடம் உண்டு.

முக்கிய குறிப்பு:
ஸ்ரூடியோ இல. 1இலும் பிரத்தியேகமாக திருத்தி அமைக்கப்பட்ட ஸ்ரூடியோ இல. 2இலும் படம் எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

★ ஞானம்ஸ் ★
ஸ்ரூடியோ
391, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-3313)



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

93 A/L கலை, வர்த்தகம்
வினா-விடை வகுப்புக்கள்

புதிய பிரிவு ஆரம்பம்: 05-09-1992
காலை 8 மணி

பொருளியல் — திரு. கனகரன்
வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
அளவையியல் — திரு. சுப்பிரமணியம்
இந்துநாகரிகம், இந்து சமயம் — திரு. காரை சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. குணராசா
அரசியல் — திரு. ஜெயகாந்தன்
வரலாறு — திரு. சிறீதரன்

குறிப்பு:
★ எமது மாணவர்களின் பெறுபேறுகளே எமது உத்தரவாதம்.
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(சி-3184)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda 1.5 K. V ஜெனறேற்றர், மண்ணெண்ணெய் Fridge, அலுமினிய சோக்கேஸ், வேறும் பல பொருள்கள்; ஜெயா ஏல விற்பனைப் பகுதி, டாஸ் கொம்ப்ளெக்ஸ், 163, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [5292]

## மலிவு விற்பனை

மாணவர்களுக்கு அப்பியாச கொப்பி, புத்தகங்கள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. றோணியோ, குறித்த தவணையில் தரமாகச் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம். [சி-3181]

## மணப்பெண் தேவை

யாழ். கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த முப்பத்தொரு வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற, அச்சுவினி நட்சத்திர, சுவிஸில் தொழில் புரியும் மணமகனுக்கு மணப்பெண் தேவை. சுவிஸ் நாட்டிற்கு அனுப்பிவைக்க ஒழுங்கு செய்யப்படும். சாதகக் குறிப்புடனும், சகல விவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். இல. 437, மே/பா உதயன். [22410]

## மணமகன் தேவை

இந்து. (பூசம் நட்சத்திரம், உதயச் செவ்வாயை வியாழன் 5ஆம் பார்வையாகப் பார்க்கிறது. கிரகபாவம் 60) Draughtsman சித்தியடைந்து Quantity Surveyக்குப் படிக்கும் 26 வயதுப் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [22385]

## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள இன்றே எம்மை நாடுங்கள்! சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், இல. 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [22345]

## இலவச திருமண சேவை

வயது 31, கிறிஸ்தவ (Non R/C) தனியார் துறை உத்தியோக மணப்பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. சகல தரங்களிலும் மணமக்கள் உண்டு. நாடுங்கள் ஞாயிறு காலையில். துவிமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [1776]

## ENGLISH

First Class Methodical Coaching for English Teachers Examination முதன்மையாகச் சித்தி பெறும் வகையில் பயிற்றப்படுகிறது. V. N. Kandasamy, A. I. B (Part I) (London) Inter (London). இல. 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில் (22405)

## தவறிவிட்டது

செவிப்புலன் குறைந்தவர்கள் உபயோகிக்கும் கருவி (Hearing-aid) 03 - 09 - 1992 அன்று சுண்டிக்குளிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மத்திய கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்; சன்மானம் வழங்கப்படும். [இ-3327]

02 - 09 - 1992இல் ஆவரங்கேணிக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் உடுப்புகள், மருந்துகள், மற்றும் வாசனைப் பொருள்கள் அடங்கிய காப்பு பிரயாணப் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். ந. கிருஷ்ணமூர்த்தி 75. பொன்னம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். [22412]

## கோழிக் குஞ்சுகள் விநியோகம்

வெள்ளை பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு சிங்கம் வீதி, உடுவில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்), மல்வம் வீதியூடாக முதல் வலது பக்கம் திரும்பும் சிங்கம் வீதி. [4961]

## இப்பில் இப்பில் விதை

இப்பில் இப்பில் விதைகள் தேவைப்படுவோர் ரூபா 1/- பெறுமதியான அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-3223)

## புலமைப்பரிசில் பரீட்சை

23 - 08 - 1992 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு-5 (புலமைப் பரிசில்) பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். Bond Institutes. 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3162]

## தையல்காரர் தேவை

வெட்டித் தைக்கத் தெரிந்த ஆண், பெண் தையல்காரர் உடன் தேவை. தொடர்பு; மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தைக்கு முன்பாக மானிப்பாய். [22401]

## இன்று வியாழ மாற்றம்

இன்று வாக்கியப்படியும், 11 ஆம் திகதி திருக்கணிதப் படியும் வியாழன் கன்னி ராசிக்கு மாற்றம் அடைகின்றது வியாழமாற்றம் ரூ 8-50/- எங்கும் விற்பனையாகின்றது. (கணித்தவர்- Prof. சத்தியதாஸன்) சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [22411]

---

## கலை, வர்த்தக கல்லூரி

# C.C.A

O/L 1992 விஞ்ஞானம் மீட்டல் வினா - விடை வகுப்பு.

ஆரம்பம்: 05 — 09 — 1992

சனி, ஞாயிறு } மாலை 5 மணி.

இரா. செல்வவடிவேல். [சி-3199]

---

# O/L PAPER CLASS

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, வர்த்தகம் சமயம், மனைப்பொருளியல், விவசாயம், சித்திரம், ஆகிய பாடங்களுக்கான

மீட்டல் வினா-விடை (PAPER CLASS) வகுப்புகள்

ஆரம்பம்: 05 - 09 - 1992

# BOND Institutes

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி 3322]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

# Spoken English With Grammar

by Britto

ஆரம்பம்: 05 - 09 - 1992 (11 மணி) [சி-3198]

---

துரிதமாக, இலக்கணப் பிழையின்றி ஆங்கிலம் பேச எழுத

# SPOKEN ENGLISH With GRAMMAR

திரு. M. A. ஹரி B. A. (Hons) Dip-in-Eng.

பிரிவு II

திங்கள், வெள்ளி } பிற்பகல் 3-30 மணி

ஆரம்பம்: 04-09-1992

# BOND INSTITUTES

யாழ்ப்பாணம். (சி-3325)

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

# O/L PAPER CLASS

பிரிவு - II

ஆரம்பம்: 08-09-1992

கணிதம் — கதிர்
— ரட்ணவேல்
விஞ்ஞானம்
— தயாநிதி
சமூகக்கல்வி
— கியூபேட்
ஆங்கிலம் — ரவி
— பகீரதன்
தமிழ் — பிரதீபன்

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும். [சி-3190]

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 03 — 1943

மறைவு: 28 — 08 — 1990

அமரர்

## பொன்னையா மகேந்திரன்

(புகையிரத நிலைய அதிபர் - முருங்கன்)

திதி: 04 — 09 — 1992

அன்புத் தெய்வமே! நாம் வாழ வழிகாட்டிய அன்புச்சிகரமே! எம்மை நல்வழி நடத்திய பண்பின் உறைவிடமே! கலங்கரை விளக்காய் ஒளிதந்து வாழவைத்த குடும்பத்தின் குலவிளக்கே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள்.

"ஜெயாபதி", கிழவிதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. [22380]

---

# ★ இடமாற்றம் ★

## வாணி கல்வி நிறுவனம்

வடலியடைப்பு.

மாணவர்கள், ஆசிரியர்களின் வசதி கருதி தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளது.

புதிய இடம்: சண்டிலிப்பாய் லீலா பேக்கவுஸ் அருகாமை

05 - 09 - 1992 (சனி) மாலை 4-00 மணிக்கு வகுப்புகள் ஆரம்பமாகும். [22408]

---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பின் இறைவா! எங்கள் வாழ்வில் ஒளி விளக்காக வழிகாட்டிய எம் அன்புத் தாயின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.



## திருமதி ஆரோக்கியம் செபமாலை

இன்று 04-09-1992 காலை 6-30 மணிக்கு மானிப்பாய் புனித அன்னாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

- குடும்பத்தினர்.

கூழாவடி, ஆனைக்கோட்டை. [5293]

---

# பொருளியல் வினா-விடை

திரு. உதயன்

# A/L 1993

வடமாகாணத்தின் முன்னணி நிறுவனங்கள்

★ C. C. A. ★ ECALOM ★ NIRU ★ BITSMAN ★ VANI

ஆரம்பம்: 05-09-1992 (சனி)

● அனுமதிகள் நிறுத்தப்பட உள்ளதால் முன்கூட்டியே அனுமதிகளை பெறவும். [சி-3312]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஆச்சரியமில்லை

இருபத்தேழு கோடி ரூபா நிலுவையைச் செலுத்தினால் மட்டுமே, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இனிமேல் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்ப முடியும் என்று மிரட்டப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் நாயகமும், திறைசேரியும் செய்துகொண்ட ஏற்பாட்டின் பிரகாரம்—

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் பொருள்களுக்குக் கிடைக்கும் பணத்தை, திறைசேரியிடமிருந்து யாழ் செயலகத்துக்குச் சேரவேண்டிய கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தவும்—

அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு யாழ் செயலகத்திடம் இருந்து சேரவேண்டிய பணத்தை திறைசேரி கொழும்பில் செலுத்தவும்— உடன்பாடாகியது.

கடந்த எட்டு மாதங்களில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் 30 கோடி ரூபா பெறுமதியான பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியிருக்கிறார். அவை விநியோகிக்கப்பட்டுப் பணமும் பெறப்பட்டது. அந்தப் பணம் திறைசேரியின் கொடுப்பனவுகளுக்காக அரச அதிபரால் பயன்படுத்தப்பட்டது.

ஆனால் ஒப்புக்கொண்டதற்கு இணங்க திறைசேரி செயற்படவில்லை. 30 கோடி ரூபாவுக்குப் பதில் 3 கோடி ரூபாவை மட்டுமே அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்குச் செலுத்தி உள்ளது.

இது விடயத்தில் யாழ். அரச அதிபரை மிரட்டுவதோ அல்லது அத்தியாவசிய உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்காமல் நிறுத்தி வைப்பதோ நியாயமாகாது. கொழும்பில் உள்ள இரண்டு அரச இயந்திர அலகுகள் தாம் இணங்கியவாறு செயற்படாததற்கு யாழ்ப்பாண மக்களைப் பட்டினி போட முனைவது எந்த வகையில் பொருத்தமானது?

தமிழ் மக்களைக் கொல்வதற்குத் தேவையான பாதுகாப்புச் செலவுக்காக எப்படியாவது பணத்தைக் கண்டுபிடிக்கும் திறைசேரியினால், யாழ்ப்பாணத்தில் தான் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளுக்கு நிதியைத் தேடிக் கொள்ள முடியாமற் போயிற்றா......?

இது வேண்டுமென்றே செய்யப்படும் சதி. தெற்கின் தேவைகளுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம் தமிழ்ப் பகுதிகளுக்குச் சேரவேண்டிய ஒதுக்கீடுகளை தயக்கம் எதுவுமின்றி நிறுத்தி விடுவது அல்லது வெட்டுவது என்பது அரசாங்க அதிகாரிகளுக்குப் பழக்கமாகி விட்ட ஒன்று.

தமிழ் மக்களுக்கு எல்லாப் பக்கங்களாலும் நெருக்குதல்களை, அழுத்தங்களைக் கொடுத்து அவர்களது உரிமைப் போராட்டத்தை நசுக்கி விடுவதற்கான மறைமுக, புலப்படாதஉத்தியே திறைசேரியின் இந்த அசமந்தம்.

தமிழர்களுக்கு எதிராக எதனையும் செய்யலாம். அவர்களைக் கொல்லலாம்; பட்டினி போடலாம்; அவர்களின் பிரதேசத்தைச் சிதைக்கலாம். தட்டிக் கேட்பதற்கு எவருமில்லை. யாராவது சுட்டிக் காட்டினாலும் கூட, உண்மையை மறைத்து வேறு வகையாகப் புனைந்து கூறிப் பொய்யை அவர்களை நம்பச் செய்து விடலாம். இந்தத் துணிவிலேயே கொழும்பு அரசினரும், அதிகாரிகளும் செயலாற்றுகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில், தங்களில் ஒரு சாரார் விட்ட தவறுக்காக, அத்தியாவசிய சேவைகள் நாயகம் யாழ்ப்பாண மக்களைத் தண்டிக்க முனைவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லைத் தான்!

## உற்சவங்கள்

குருநகர், செப் 4

யாழ் வண் - வடமேற்கு நாவலடி சித்திவிநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை விசேட பூசை அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 10நாட்கள் நடைபெறும். [த-51]

★ ★ ★

முறிகண்டி, செப். 4

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகிறது [த-ரி]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக 4

நவாலி வடக்கு அட்டகிரி விஸ்வநாதர் கோவில் நவோத்திர சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகலில் விசேட பூசையும், மாலையில் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ ★ ★

திருநெல்வேலி கேணியடி அருள்மிகு ஞானவைரவர் கோவில் அலங்கார உற்சவத்தின் நான்காம் திருவிழாவான இன்று பண்டிதர் நா. இராசையா அவர்களின் சமயச் சொற்பொழிவும், விசேட இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

★ ★ ★

வியாழ மாற்றம் இன்று நிகழ்வதை முன்னிட்டு கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று காலை 8-30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை இடம்பெறும். நூற்காப்பும் வழங்கப்படும். [அ]

## பல்கலைக்கழக சிற்றூழியருக்கு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். பல்கலைக்கழக சிற்றூழியர்களை எழுதுநர்களாக பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் 6ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கிறது.

நாட்டில் உள்ள சகல பல்கலைக் கழகங்களிலும் நடைபெறும் இப்பரீட்சையில் யாழ். பல்கலைக் கழகத்தில் உள்ள 5 வெற்றிடங்களுக்கு 43 சிற்றூழியர்கள் தோற்றுகிறார்கள். [இ-3]

## கருத்தரங்கு

கொக்குவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடுவப் பணியக மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு அறிவியல் கருத்தரங்குத் தொடர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமாகிறது

தமிழீழ மாணவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் நோக்குடன் மேற்படி கருத்தரங்குத் தொடர் வெள்ளிக்கிழமை தோறும் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் கருத்தரங்கு தொடர்பான 'வீடியோ' படக்காட்சியும் காண்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## மேஜர் முரளி ஞாபகார்த்த போட்டிகள்

வடமராட்சி செப். 4

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டி வடமராட்சி கோட்ட மட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

சின்னத்தம்பி வித்தியாலயம், நெல்லியடி மகா வித்தியாலயம் விக்கினேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் இன்று உதைபந்தாட்டம் மற்றும் வலைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

சனி, ஞாயிறு கிழமைகளில் ஆண்கள், பெண்களுக்கான மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடைபெறும். 14 ஆம் திகதி நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இறுதிப் போட்டிகள் இடம்பெறும். (ஓ-165)

# ஜனநாயகத்தை நிலைநாட்டும் போராட்டத்தில் கட்சி ஈடுபடும்

## சிறிமா நேற்று அறிக்கை

கொழும்பு, செப் 4

இலங்கையில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டும் போராட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தொடர்ந்து ஈடுபடும்.

— இவ்வாறு அக்கட்சியின் தலைவியும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்குத் தீர்ப்பைவிட நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் ஒன்று நடத்தப்பட சுதந்திரக் கட்சி தைரியமுடன் போராடும்.

வழக்குத் தீர்ப்பின் மூலம், இன்று இலங்கை முழுவதிலும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியுள்ளது

சுதந்திரமான தேர்தல் நடத்தப்படவும் ஜனநாயகம் மீண்டும் நிலைநாட்டப்படவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, வழக்கின் தீர்ப்பை அளித்த நீதிபதிகளை விடக் கூடிய தைரியத்துடன் மக்களிடம் செல்லும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் லட்சக்கணக்கான மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியாமற் போயிற்று என்பது வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது பொது மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்த வழக்கைத் தாக்கல் செய்ததன் நோக்கம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாக நடத்தப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டவே.

சகல மக்களும் சுதந்திரமாக வாக்களித்து பெரும்பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி பதவியேற்கக்கூடியதாக தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்ப்போம். — என்று உள்ளது [ஓ-10]

## தியத்லாவையில் எரிமலை

தியத்லாவை மலைப்பிரதேசத்தில் எரிமலை ஒன்றை இராணுவத்தினர் கண்டுபிடித்துள்ளனர். என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது எரிமலைக்குழம்பு என்று உறுதி செய்யப்பட்டால் வெடிக்கும் அபாயம் கொண்டதா என்பதை அறியுமாறு பூகர்ப்பவியலாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது

தியத்தலாவையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் பெரிய பயிற்சி முகாம் ஒன்று இருப்பது தெரிந்ததே. [ஓ-எ]

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 4

மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்புக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது [ஓ]

## தீர்ப்பு வழங்கிய சமயம் சிறிமா அனுராதபுரத்தில்

கொழும்பு, செப். 4

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு மீதான தீர்ப்பு வழங்கப்பட்ட சமயம் சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அனுராதபுரத்தில் இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது

தீர்ப்பு வெளியான அன்று காலையே திருமதி பண்டாரநாயக்கா ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரம் சென்றிருந்தார். [ஓ-எ]

## நிவாரணத்துக்கு 'அங்கர்' பால்மா

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணத்தில் ''அங்கர்'' பால்மா வழங்கப்பட இருக்கிறது.

இதுவரை நிவாரணமாக ஹைலண்ட் பால்மாவே வழங்கப்பட்டு வந்தது.

இந்த மாதத்தின் 4 வாரங்களுக்கும் 'அங்கர்' பால்மாவை வழங்குமாறு ப. நோ. கூ. சங்கங்களுக்கு செயலகம் பணிப்புரை விடுத்துள்ளது. [இ-3]

## இன்று வியாழ மாற்றம்

யாழ்ப்பாணம். செப் 4

வாக்கிய பஞ்சாங்கப்படி இன்று வியாழ மாற்றம் நிகழுகிறது.

வியாழன் (குரு) சிம்மராசியிலிருந்து கன்னிராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடத்துக்கு கன்னிராசியிலேயே சஞ்சாரம் செய்வார்

திருக்கணித பஞ்சாங்கப்படி குரு பகவான் சிம்மராசியிலிருந்து கன்னிராசிக்கு இம்மாதம் 11 ஆம் திகதி மாறுகிறார். ஒரு வருட காலத்துக்கு கன்னி ராசியில் அவர் சஞ்சரிப்பார் [அ]

## வாழ்க்கைச் செலவு புள்ளி 1255.2

கடந்த ஆகஸ்ட் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1255 2 ஆக இருந்தது என்று கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்திருக்கிறது [ஓ-எ]

## பூமியதிர்ச்சி 100 பேர் பலி

மனாகுவா, செப். 4

நிக்கரகுவா நாட்டின் பசிபிக் கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடுமையான பூமியதிர்ச்சியில் 100 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது

500 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். 200 பேரை இன்னமும் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது

சுமார் 16 ஆயிரம் பேர் தமது வீடுகளை இழந்துள்ளார்கள்;

பூமியதிர்ச்சி காரணமாகக் கடலலைகள் 10 மீட்டர் வரையில் உயர்ந்து நாட்டுக்குள் புகுந்தன: வெள்ளத்தில் அள்ளுப்பட்டுப் பல குழந்தைகள் உயிரிழந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது. [இ-10]

## திலீபன் நினைவு தடகள விழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் தியாகி திலீபன் நினைவு தடகள விழா நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது

நேற்று நடந்த போட்டிகளில் பெண்களுக்கான 800 மீற்றர், 1000 மீற்றர் ஓட்டங்களில் புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

போட்டிகள் இன்று நண்பகல் 2 மணி முதல் மத்திய கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து நடைபெறும்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளின் படி வட்டப் பிரதேச ரீதியாக பதக்கங்களின் விவரம் வருமாறு:-

| வட்டப்பிரதேசம் | தங்கம் | வெண்கலம் | வெள்ளி |
|---|---|---|---|
| சண்டிலிப்பாய் | 6 | 3 | 3 |
| தெல்லிப்பழை | 2 | 2 | 1 |
| யாழ்ப்பாணம் | 1 | 1 | 2 |
| உடுவில் | 1 | 1 | 0 |
| நல்லூர் | 0 | 2 | 1 |
| பருத்தித்துறை | 0 | 1 | 0 |
| பளை | 0 | 0 | 1 |
| கோப்பாய் | 0 | 0 | 1 |

# வழமை நிகழ்வுகளின் ஒத்திவைப்பு மக்கள் மனோநிலையை பாதிக்கும்

## உபவேந்தர் கருத்து

அசாதாரண நிலை உருவாகி இருக்கிறது என்பதால் வழமையான நிகழ்வுகள் விழாக்களை ஒத்திவைப்பதால் மக்கள் மனோவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவர்.

அத்தகைய பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு வழமையான நிகழ்வுகள், விழாக்களைக் கொண்டாடுவது அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா.

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நாளை நடைபெறுவது தொடர்பாக புதன்கிழமை நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போதே துணைவேந்தர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

யாழ். மாவட்டத்தின் மீது பெரும் இராணுவத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற பீதியுடன் மக்கள் வாழும் அசாதாரண சூழ்நிலையில் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா அவசியம் தானா என்ற கேள்வி எழுகிறது— எனத் தெரிவித்த துணை வேந்தர் அது குறித்துப் பின்வருமாறு பதிலளித்தார்.

யாழ். மாவட்டத்தில் அசாதாரண நிலை நிலவியபோதும் வழமையான நிகழ்வுகள் நடைபெறவேண்டும் என்ற மனோநிலை மக்களிடையே ஏற்படவேண்டும். அதற்காகவே பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது—

இந்த அசாதாரண நிலையில் வழமைபோல் விழாக்கள், வைபவங்கள் நடத்தப்பட வேண்டும். இவற்றை ஒத்திவைப்பதன் மூலம் மக்கள் மனோவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவர்—

மக்களின் மனோவியல் பாதிக்காமல், விழாக்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டவே பட்டமளிப்பை ஒழுங்கு செய்தோம்—என்றார். [அ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அச்சகமொன்றிற்கு கீழ்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) யந்திர இயக்குனர்
2) அச்சுக்கோப்பாளர்கள்
3) அச்சக முகாமையாளர்
4) கணக்கு பதிவாளர்
5) ஒப்புநோக்குனர்

மூன்று வருடங்களுக்கு குறையாத வேலை அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

தமிழீழ மீட்பு நிதி தொடர்பகம்,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(22421)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லையா கமலம்மா

சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 42/5 விதானையார் வீதி சுண்டிக்குளியில் வசிப்பவருமான திருமதி செல்லையா கமலம்மா 3 - 9 - 92 வியாழக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், யோகலட்சுமி, பாக்கியலட்சுமி, தர்மராஜா, தேவன் (பிரான்ஸ்), வரதலட்சுமி, இராஜலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசிகரம் [S. H. Textiles பங்காளர், கொழும்பு], தற்பரநாயகி [ஆசிரியை, ஊர்காவற்றுறை கொத்தணியா / கரம்பன் சண்முகநாத வித்தியாலயம்] ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜதீபன், வஜீதா, லக்ஷன் தர்ஷிகா, தர்ஷிபன், தர்மஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மேற்படி இல்லத்தில் நடைபெற்று 4 - 9 - 92 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு துண்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பே. ஞானசிகரம் [மருமகன்]

42/5 விதானையார் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [22419]

### திருமதி சங்கரப்பிள்ளை அன்னம்மா

உடுவிலைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் பருத்திக்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அன்னம்மா [03 - 09 - 92] காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற கிஷ்ணராஜா [இனுவில் பத்திரிகை விநியோகிஸ்தர்], சுப்பிரமணியம் [உ. அ. அ. உடுவில், தயாகரன் பேக்கரியின் உரிமையாளர், உடுவில் பகுதி பத்திரிகை விநியோகஸ்தர்], தவமணிதேவி, தனலக்ஷ்மிதேவி, காலஞ்சென்ற வில்விமலர், கிறிஜெளரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை, ஆனந்தன், கந்தையா, பரமேஸ்வரன், மல்லிகாதேவி, தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சுப்பிரமணியம் [காந்தி] (மகன்)

பருத்திக்கலட்டி,
சுன்னாகம். [22422]


New Science Hall
Kannathidy Road,
Jaffna.

93 A/L
Physics
Heat
By
சோதிலிங்கம்
B.Sc. (Special)
பிரிவு I - SAT., SUN. 7—00 a.m.
பிரிவு II - SAT., SUN. 11-00 a.m.
ஆரம்பம்:
05 — 09 — 1992
(சி-3332)


## தலைமைப் பதவிக்காக உட்கட்சி சண்டை இல்லை

### என்கிறார் ஐ. தே. க. அமைச்சர்

கொழும்பு, செப். 4

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைப் பதவிக்காக உட்கட்சிச் சண்டை நடைபெறவில்லை. உட்கட்சிச் சண்டை ஏற்படக் கூடும்; இப்போது அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சருமான திரு. சிறிசேன கூரே 'சண்டே ஐலண்ட்' வார இதழுக்கு அளித்த பேட்டியில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

தலைமைப் பதவிக்கு வர ஒருவர் விரும்பினால் அவர் தம்மைக் கட்டி எழுப்ப வேண்டும். அதற்குச் சரியான நேரம் உண்டு. அதற்கு குறுக்கு வழியில் எவரும் செல்லக் கூடாது என்றும் அவர் சொன்னார்.

(த-எ)


# தேன் சுரபி

சைவ உணவகம்

"மதிய உணவு"

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட சலுகையுண்டு.

பலாலி றோட்,
திருநெல்வேலிச் சந்தி. (சி-3207)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை சரஸ்வதி

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த பொன்னுத்துரை சரஸ்வதி நேற்று 3 - 9 - 1992 இல் புளியங்குளத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரை [பிரபல வர்த்தகர், நொச்சியாகம] அவர்களின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், ஜெயலச்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3 - 9 - 1992 வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு புளியங்குளம் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. சிதம்பரப்பிள்ளை [மைத்துனர்]

42/1, கோணாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [22423]

### திரு. தருமலிங்கம் ஸ்ரீபாலன்

(முன்னாள் இ. போ. ச. ஊழியர்)

காலஞ்சென்ற தருமலிங்கத்தின் [விதானையர்] இளைய மகன் ஸ்ரீபாலன் 29 - 8 - 92 ல் ஜேர்மனியில் அகாலமரணமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன. இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மதிவதனி பரமேசன் [சகோதரி]

உரும்பராய் மேற்கு,
உரும்பராய். [4992]

### ராணுவச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான நிதி ஒதுக்கீடு இன்மையினால் உடனடியாக வடபகுதி அகதிகளுக்கான நிவாரணப் பொருள்கள் 2 வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும்—, நிவாரணம் வழங்க உதவுமாறு அரசு ஏற்கெனவே அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் — திரு. கிறிஸ்ரி சில்வா கூறினார். யுத்தம் காரணமாக யாழ். குடாநாட்டில் மட்டும் 53 773 பேர் அகதிகளாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை 5 பேர் கொண்ட அகதிக் குடும்பம் ஒன்றுக்கு ஒரு வாரத்துக்கு 315 ரூபா அளித்து வந்த அரசாங்கம்—

இனிமேல் நிரந்தர ஏற்பாடாக அதே பணத்தை இரு வாரங்களுக்கு வழங்கும் என்றும் இதன் மூலம் நிவாரணம் சரி பாதியாகக் குறைக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் இராணுவச் செலவு அதிகரித்து வருவதால் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி உள்ள இலங்கை அரசு கடந்த வாரம் பெற்றோலியப் பொருள்களின் விலைகளை அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

(அ-எ-10)

(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்)

### வாணிபம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயன்முறை யாழ். குடாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முதலில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளோர் இம்மாதம் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையும்—

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளோர் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையும்—

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளோர் இம்மாதம் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

★ பவுண் / பொன் / வெள்ளி நகை வாணிபம். அடகு நகை, நகை உற்பத்தித் தொழில்.
★ பலசரக்கு வாணிபம்.
★ புடவை வாணிபம்.
★ கட்டடப் பொருள்கள், மின்சாதனங்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள்.

யாழ். குடாநாட்டின் ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இத்திட்டம் அமுல் செய்யப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)


# A/L 93, 94 புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 05 — 09 — 1992 (சனி)

| நேரம் | பாடம் | ஆசிரியர் | அலகு |
|---|---|---|---|
| சனி. ஞாயிறு | | | |
| 07-45 — 09-00 | பௌதீகவியல் | திரு. வர்ணம் | ஒளியியல் |
| 10-45 — 11-45 | பௌதிகவியல் | திரு. பத்மநாதன் | பொறியியல் |
| 01-15 — 02 15 | விலங்கியல் | திரு. நாகநாதன் | வன்கூட்டுத் தொகுதி |
| 02 15 — 03-15 | தாவரவியல் | திரு ஐங்கரநேசன் | தாவரப் பாகுபாட்டியல் |
| 03-15 — 04 15 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | நுண்ணுயிரியல் |
| 04 15 — 05-00 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | வினா-விடை வகுப்பு |
| 05-00 — 05-45 | இரசாயனவியல் | திரு செல்வா | பொது இரசாயனம் |
| 05-45 — 06-30 | விலங்கியல் | திரு. நாகநாதன் | உணவுக் கால்வாய்த்-தொகுதி |

★ யூனிவேர்சல் ★

கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-3224)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04 - 09 - 92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org